செ. கு. எண்:290 நாள் :29.10.2013

# உலக சிக்கன நாள்

## வாழ்த்துச் செய்தி

சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பினை வலியுறுத்தும் நாளாக ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 30ம் நாள் **“உலக சிக்கன நாளாக”** தமிழகமெங்கும் கொண்டாடப்படுவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

“ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை”

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, செலவுகளைக் குறைத்து, வரவுக்குள் செலவுகளை கட்டுப்படுத்தி, அனைவரும் சிக்கனமாக வாழ வேண்டும் என்பதையே உலக சிக்கன நாள் வலியுறுத்துகிறது.

சிறுக சிறுகச் சேமிப்பதன் மூலம் குடும்பத்திற்கு எதிர்காலத்தில் தேவைப்படும் அவசரத் தேவைகளுக்கான செலவுகளை எளிதில் எதிர்கொள்ளலாம். பிள்ளைகளின் படிப்பு, திருமணம், வீடு கட்டுதல் போன்ற செலவினங்களுக்கு பிறரிடம் கையேந்தாமல், கடன் வாங்காமல் அச்செலவுகளை நமது சேமிப்பிலிருந்து சுயமாக கௌரவத்துடன் மேற்கொள்ளலாம். அதற்காக ஒவ்வொருவரும் தம்முடைய வருவாயில் ஒரு பகுதியை பாதுகாப்பான வழியில் சேமிப்பது தான் சிறந்த வழி. அஞ்சலகத்தில் செயல்படுத்தப்படும் சிறு சேமிப்புத் திட்டங்கள் மிகவும் பாதுகாப்பானவை.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் சீரிய ஆட்சியில் தமிழக மக்கள் அனைவரும் தங்களது இல்லங்களுக்கு அருகிலுள்ள அஞ்சலகத்தில் வீட்டிற்கொரு அஞ்சலக தொடர் சேமிப்புக் கணக்கினைத் (Post Office Recurring Deposit) துவக்கி பயன் பெற்றிட இந்த உலக சிக்கன நாளில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(ஓ. பன்னீர்செல்வம்)

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9